# தேர்த்திருவிழா சிறுகதை சித்திரிக்கும் கண்ணியம்

முனைவர். மா. போ. ஆனந்தி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
உடுமலைப்பேட்டை

இவ்வுலகில் மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் தாம் வாழும் நாட்களில் பிறரைத் துன்புறுத்தாவண்ணம் வாழ வேண்டும் என்று பொறுப்பு உள்ளது. தன்னைச் சார்ந்தவர்களாயினும், தான் சார்ந்தவர்களாயினும் அவர்களை மதித்து வாழ வேண்டும் என்பது உணர்வு அடிப்படையில் எழுந்த சட்டம் என்றே கூறலாம். அச்சட்டத்தை மதித்து வாழ இன்று பலரும் தயாராக இல்லை. குறைந்தபட்சம் தம் குடும்பத்தாரையாவது மதித்து அவர்களுக்கு மரியாதை கொடுத்து வாழ்ந்தாலே குடும்பங்கள் இன்னலில்லாமல் வாழும். இளம் தலைமுறையினர் பெற்றோரைப் புரிந்துகொண்டு அவர்கள் மனம் நோகாதவாறு வாழ வேண்டும். பிள்ளைகள் மனம் நோகாதவண்ணம் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்து ஆராய்ந்து முடிவெடுக்கும் பெற்றோர், இறுதிவரை தம் பிள்ளைகளின் நலம் ஒன்றையே குறிக்கோளாகக்கொண்டு வாழ்கிறார்கள் பெரும்பாலான பெற்றோர், பிள்ளைகள் தம் திருமண வாழ்வைப் பற்றித் தனியாக முடிவெடுக்கும் சமயங்களில் அம்முடிவு நல்லதாகவே இருந்தாலும்கூட அதை ஏற்றுக்கொள்ள முன்வருவதில்லை. அதில் சுய கௌரவத்தை முன்னிறுத்தி அம்முடிவிற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையே மனக்கசப்பு ஏற்படுவதற்கும். பிரிவினை ஏற்படுகிறது. இவ்வகையில் ஆசிரியர் எஸ். ஏ. காதர் அவர்களின் ‘தேர்த்திருவிழா’ என்னும் சிறுகதையில் பெற்றோரும், பிள்கைளும் தத்தம் கடமைகளை உணர்ந்து பொறுப்பாக நடந்து கொள்வதினால் ஏற்படும் மனநிறைவும், வாழ்வின் இயல்பு மாறாமையும் பற்றி எடுத்துக் கூறுகிறது இவ்வாய்வுக்கட்டுரை.

ஒரு கிராமத்தின் பஞ்சாயத்துத் தலைவராகவும் கோயில் தர்மகர்த்தாகவும் இருப்பவர் முத்துவேலப்பர். நன்செய், புன்செய் என்று பல ஏக்கர் நிலத்திற்குச் சொந்தக்காரர். அவருடைய தந்தையார் மகாத்மா காந்தியைப் போல எளிமையாக வாழ்ந்து நற்பெயரையும் அன்பையும் சம்பாதித்துக் கொண்டவர். அவரைப் போன்றே முத்துவேலப்பரும் எளிமையாகவும் அனைவரிடமும் வேற்றுமை பாராட்டாமல் அன்போடும் கனிவோடும் வாழ்ந்து வருபவர். அவருக்குப் பூங்கொடி என்ற தங்கையும்,

பதினேழு வயதில் மலர்விழி என்ற மகளும் உள்ளனர். மனைவி சிவகாமி மலர்விழியைப் பெற்றெடுத்துவிட்டு இறந்து விட்டாள். தன் தங்கையின் பாதுகாப்புக் கருதி இவர் மறுமணம் செய்து கொள்ளாமலேயே வாழ்கிறார். ஏனெனில் பூங்கொடிக்குத் திருமணம் ஆகவில்லை. அவள் பெண்மைக்குண்டான பூப்பு நிலையை அடையாத காரணத்தினால் திருமணத்திற்கு வாய்ப்பில்லாமல் போய்விட, அவளைப் பல மருத்துவர்களிடம் அழைத்துச் சென்றும் பலனில்லாமல் போகிறது. பூங்கொடி அதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாதவளாக தன் அண்ணன் மகள் மலர்விழியைத் தன் மகள் போல் கருதிக் கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகிறாள். "முத்து வேலப்பரின் மனைவி சிவகாமி மலர்விழியைப் பெற்றெடுத்துக் குழந்தையைத் தன் கணவரிடம் ஒப்படைத்துவிட்டுக் கண்ணை மூடிவிட்டாள். அது முதல் குழந்தையை வளர்க்கும் பொறுப்பைப் பூங்கொடிதான் எடுத்துக் கொண்டாள். ஒரு தாய்க்கும் மேலாக மலர்விழியைக் கண்ணுக்குக் கண்ணாக வளர்த்து வருகிறாள். உண்மையிலேயே மலர்விழியின் தாய் சிவகாமி இருந்திருந்தால்கூட மலர்விழிக்கு இந்த அன்பும் அரவணைப்பும் கிடைத்திருக்குமா என்பது சந்தேகமே..." (ப. 43) என்பதிலிருந்து தன் அண்ணன் மகளுக்காகத் தான் வாழும் தன்னலமின்மையைக் காணமுடிகின்றது.

இன்னொரு புறம் அபூபக்கர், சுரையா என்ற இசுலாமிய சர்க்கஸ் வித்தைக்கார குடும்பம். இவர்களுக்கு உசேன், (பிரேம்குமார்) அசேன் (மதன்குமார்), தாரா, சம் என்ற நான்கு பிள்ளைகள். இவர்கள் நால்வரும் இவர்கள் தத்தெடுத்த பிள்ளைகள். ஊர் ஊராகச் சென்று சர்க்கஸ் வித்தை காட்டி தங்கள் பிழைப்பை நடத்துபவர்கள். ஒரு புரிதலுணர்வுடன் கூடிய இன்பமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். "டேய்... பார்த்து மெதுவா சாப்பிடு... முட்டெ தொண்டையிலே சிக்கி... அப்புறம் சிரமப்படப்போறே... என்று குள்ளனைப் (சம்) பார்த்துப் பிரேம்குமார் சொன்னான். 'போண்ணே, உனக்கு இன்னும் முட்டையை எப்படி சாப்பிடறதுன்னு தெரியலெ... நா வேன்னா இன்னொரு முட்டையை உனக்குச் சாப்பிட்டுக் காட்டவா..' என்று சொல்லிக்கொண்டே பிரேம்குமாரின் தட்டில் கையை வைக்கப் போனான். பிரேம்குமார் சட்டென அவனுடைய தட்டை தலைக்குமேலே தூக்கிக்கொண்டான். அனைவரும் சிரித்தனர். 'இந்தாடா சம், வேணும்னா இன்னொரு முட்டையை கேட்டு வாங்கிச் சாப்பிடு... அவெ தட்டுலெ ஏன் கை வைக்கறே..' என்றாள் சுரையா" (பக். 54, 55) இப்படிக் கூட்டுக் குடும்பமாக ஒரு சித்திரக் காட்சி போன்றே அழகான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் சுரையா குடும்பத்தினர். பெரிதான வருமானம் ஒன்றும் இல்லையென்றாலும், கிடைக்கும் வருமானம் உணவுக்கும் உடைக்குமே சரியாக இருக்கும்பட்சத்திலும் அவர்கள் பேராசையின்றி நிம்மதியாக வாழ்ந்தனர்.

இவர்கள் முத்துவேலப்பரின் கிராமத்திற்கு தேர்த்திருவிழாவின் போது வந்து வித்தை காட்டுவதற்காக பத்து நாள் தங்குகின்றனர். அச்சமயத்தில் முத்துவேலப்பரின் மகளான மலர்விழிக்கு அசேன் என்றழைக்கப்படுகின்ற மதன்குமாரின் மீது காதல் ஏற்படுகின்றது. அதை யாரிடமும் கூறாமல், ஒரு நாள் மரணக்கிணற்றில் மோட்டார் சைக்கிள் ஓட்டிக்கொண்டிருந்த மதன்குமாரின் கழுத்தில் ரோஜப்பூவும், ரூபாய் நோட்டுக்களும் சேர்த்துத் தொடுத்த மாலையை வீசுகிறாள். மாலையை வீசியது

மலர்விழிதான் என்பதைக் கண்டுகொண்ட மதன்குமார், நிலைமையை ஒருவாறு யூகித்துக் கொண்டான். உடனே அவ்விடத்தைவிட்டு வெளியேறி அவர்கள் தங்கியிருந்த கூடாரத்திற்கு வருகின்றான். யாரிடமும் எதுவும் கூறவில்லை. ஏதோ ஒரு வேகத்தில் செய்துவிட்டாலும் இது மலர்விழிக்கு மனதில் ஒருவிதச் சங்கடத்தை ஏற்படுத்தியது. ‘ம்... நாம் அவசரப்பட்டுத் தவறு செய்து விட்டோமா...? நான் செய்த இந்தக் காரியம் சரியா? என்று உள்மனதில் புலம்பிக் கொண்டாள் (ப. 51) அவளின் தோழியான அலமேலுவும், “மலரு... நா. சொல்றேன்னு வருத்தப்படாதே...! நீ நடந்துகிட்ட முறை... எனக்குக் கஷ்டமா... இருக்கு.. ஒரு பெண்ணானவ.. கல்யாணத்துலெதா.. ஒரு ஆடவனுக்கு மாலை சூடுவா, நீ என்னன்னா...?” (ப. 52) என்று அவளை நல்வழிப்படுத்த அறிவுரை கூறுகிறாள். மலர்விழி அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவன் வீரவித்தைக் காட்டுவதைப் படம் எடுத்து வைத்துக்கொண்டு தன் அறையில் தனியாக பார்த்து ரசித்துப் கொண்டிருக்கிறாள். இதனைக் கண்டுகொண்ட அவளின் அத்தை, அதைப்பற்றித் தன் அண்ணனிடம் கூறத் தயங்குகிறாள். அவள் அவ்வாறு தயங்குவதற்குக் காரணம், “மலரு... நீ என்னமோ... எங்க போயி முடியுமோ... இதனாலே அந்த வித்தக்காரங்க குடும்பத்துக்கும் ஆபத்தாகவல்லவா முடியும்...” (ப. 59) என்று கலவரமும் பதற்றமும் அடைகிறாள். தன் மகளைப் பற்றிய கவலையைவிட தன் மகளால் பிறருக்கு துன்பம் நேர்ந்து விடக்கூடாது என்றெண்ணும் அவளின் கண்ணியம் புலப்படுகின்றது.

மலர்விழியின் எண்ணங்களை அவளின் ஒருசில நடவடிக்கைகளால் உணர்ந்து கொண்ட சுரையா, தன் மகனிடம், “மகனே அசேன்! அந்தக் தலைவரு வீட்டுப் பொண்ணு அடிக்கடி இங்கே வந்துட்டுப் போவுது.. என்ற உள் மனசிலே என்னமோ நடக்கப் போகுதுன்னு... ஒருவிதப் பயமா இருக்கு... நாமொ ஊர் ஊராய்ப் போய் வித்தை காட்டிப் பொழப்பு நடத்தற நாடடோடிகள்... அந்தப் பொண்ணு மனசுலே ஏதோ வளர்த்துவிட்டு அது நமக்கு ஆபத்தா போயிருமோன்னு... எனக்குப் பயமா இருக்குது, மகனே.. எதுக்கும் அந்தப் பொண்ணு விசயத்துலெ நீ கொஞ்சம் ஜாக்கிரதையாவே இரு...” (ப. 57) என்று மகனிடம் கூற மகனும் மறுப்பேதும் தெரிவிக்காமல், தாயின் அறிவுரைக்காக சலித்தும் கொள்ளாமல் ’சரிம்மா, நீங்க சொல்ற மாதிரியே நா கவனமா இருப்பேன்’ என்று தாயை அமைதிப்படுத்துகின்றான். இவ்வாறு ஒரு தாய்க்கேயுரிய அச்சணர்வுடனும், விழிப்புணர்டனும், எச்சரிக்கையுடனும் வெளிக் காட்டப்படும் சுரையா அறிவுள்ள கண்ணியமான தாயாகத் தென்படுகிறாள்.

மலர்விழியின் காதல் உள்ளத்தை யாரும் கூறாமலேயே உணர்ந்துகொண்ட அவள் தந்தை முத்துவேலப்பர், மதன்குமாரைத் தன் வீட்டிற்கு வரவழைக்கின்றார். மதன்குமார் தயக்கத்துடன் அவர் முன் வந்து நிற்க. அவனை அமரவைத்து அவனிடம் மலர்விழியைப் பற்றிப் பேசத் துவங்குகின்றார். அதற்கு மதன்குமார் ஒருவித பயம் கலந்த பதற்றத்துடன் ’இப்பொ நீங்க பேசறதெ கேட்க கேட்க என்னுடைய பயம் கூடிக்கிட்டே போகுது’ என்கிறான். அதற்கு முத்துவேலப்பர், பயப்படாதே... இந்த முத்துசுவலை, வெகுமதியோடவும் தான் வெளியிலே போவான். ஊங்கிட்டெ பேசின இந்தக் கொஞ்ச நேரத்துலேயே உன்னெப் பத்தி நான் நல்லா தெரிஞ்சுக்கிட்டடன்.

மலர்விழி உன்றெ வித்தையைக் காண அடிக்கடி அங்கு வந்து போக... உன்ற வித்தையைப் புடிச்சதுமில்லாமல் உன்னையும் அவளுக்குப் புடிச்சுப் போச்சன்னு நெனைக்கறேன்." (ப, 62) என்றும் தானே முன்வந்து தன் மகளைத் திருமணம் செய்து கொடுப்பதாகவும் கூற மதன் குமார் அதிர்ச்சி அடைகின்றான். "உங்க வார்த்தையை மறுத்துப் பேசறதுக்காக மன்னிக்கணும்...! என்னாலே ஒரு போதும் மலர்விழியெ மனைவியா நெனச்சுப் பார்க்க முடியாது. அப்படி ஒரு வேளை நான் ஒப்புக் கொண்டாலும் எல்லாரும் என்னை ஒரு குற்றவாளியாகத்தான் பார்ப்பார்கள். ஆட்டக்கார, நாடோடியாகப் பிழைப்புத் தேடி வந்தவன் தர்மகர்த்தா வீட்டுப் பெண்ணை மணமுடித்துக் கொண்டான் என்று என்னை ஏளனம் செய்வார்கள். உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்து விட்டான் பாவி என்று என்னைப் பரிகாசம் செய்வார்கள். வேண்டாமய்யா... என் மீது உண்மையிலேயே உங்களுக்குப் பரிவு இருக்குமானால் இந்தப் பழியை என்னை ஏற்க வைக்காதீர்கள். என்னை வளர்த்த அந்தப் பெரியவர்களை நான் கடைசி வரை வைத்துக் காப்பாற்ற வேண்டும். என் அண்ணனைப் போல் உள்ள அந்தப் பிரேம்குமாருக்கு கல்யாணம் செய்து வைக்கணும். என் தம்பி சமை நான் கடைசி வரை வைத்துக் காப்பாற்ற வேண்டும். இவ்வளவு கடமை எனக்கு இருக்கிற போது என்னுடைய நல்வாழ்வை மட்டும் நான் பார்க்க முடியாது. இந்த நாடோடி மேலே இவ்வளவு நம்பிக்கை வெச்சிருக்கிற உங்களெ நெனச்சு எனக்கு பெருமையா இருக்கு... நான் உங்களுக்குச் சமமா நடத்தி இவ்வளவு தூரம் மதிச்சு மரியாதையா நடத்தினதுக்கு நன்றி" (ப. 62, 63) என்ற அவனின் பதிலிலிருந்து இம்மண்ணில் பிறந்த ஒவ்வொரு பிள்ளையின் பொறுப்புகளும் கடமைகளும் வெளிப்படுகின்றன. இந்தக் கலியுகத்தில் உடன்பிறந்தவர்களே, தம்பி, தங்கைக்காகவும், தன்னை வளர்த்தப் பெற்றோருக்காகவும் தனக்குக் கிடைக்கவிருக்கும் பணக்கார வாழ்வைத் தூக்கிப் போடுகின்றான் மதன்குமார். தந்தையும் மதன்குமாரும் பேசுவதை மறைந்திருந்து கேட்டுக்கொண்ட மலர்விழியும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்கிறாள். இன்றைய இளைஞர்கள் காதல் என்ற ஒரு பார்ப்பு சதிக்குள்ள சிக்கிக்கொண்டால், அதிலிருந்து மீள முடியாமல் அவர்கள் தவிப்பதுடன் பெற்றோரையும் பலவித இன்னல்களுக்கு உள்ளாக்கிவிடுகின்ற நிலையில், மலர்விழி மதன்குமார் மீது அளவில்லாத காதல் கொண்டிருந்தாலும் உண்மை நிலையை அறிந்தவுடன் தன் எண்ணத்தை மாற்றிக் கொள்ள முன்வருகிறாள்.

மதன் குமாரின் தந்தையான அபூபக்கரிடம், முத்துவேலப்பர் உங்கள் பிள்ளைகளை நன்றாக வளர்த்திருக்கிறீர்கள் என்று பாராட்டிப் பேசும்போது அபூபக்கர், அப்பெருமையையும் பாராட்டையும் அப்படியே ஏற்றுக் கொள்ளாமல், அவை அனைத்தும் தன் மனைவியையே சாரும் என்பதனை, "நீங்க சொல்ற பாராட்டெல்லாம் என்ற மனைவி சுரையாவுக்குத்தான் சேரும்.. பசங்ககிட்டே வித்தையையும் வேலையையும் வாங்கறதோட என்ற வேலை முடிஞ்சு போச்சு... மத்தபடி அவங்களெப் பார்த்துக்கறது, கவனிச்சிக்கறது, படிப்புச் சொல்லிக் கொடுக்கறது... எல்லாமே அவதான். எனக்காகவும் இந்தப் பசங்களுக்காகவும் உழைச்சு, வாழ்க்கையிலே எந்த சுகத்தையும் அனுபவிக்காமே இன்றைக்கு வரைக்கும் எங்களோட ஊர் ஊராய்ச் சுத்தி அலைஞ்சிட்டு

இருக்காளே, இந்த மகராசிக்குத்தான்! எல்லாப் பெருமையும்" (ப. 65) என்ற கூறுவதிலிருந்து தன் மனைவியை மதிக்கின்ற, தன் மகன் மீது எந்தத் தவறும் இல்லை என்று தெரிந்திருந்தும் அபூபக்கர் முத்துவேலப்பரிடம் மன்னிப்பு கேட்கிறார். பணக்காரப் பண்ணையார் தன் மகளை ஆட்டக்காரக் குடும்பத்திற்கு மணமுடிக்க முன்வருவதும், எவ்வளவு பணக்காரர்களாக இருந்தாலும் அதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் கடமையுணர்வுள்ள இளைஞனையும் தவறே செய்யாமல் மன்னிப்புக் கேட்கும் அவ்விளைஞனின் தந்தையும் என்று கதாபாத்திரங்களைப் பார்க்கும்போது ஒவ்வொரு குடும்பத்திலும் இவ்வாறு தத்தம் கடமையுணர்வுகளை உணர்ந்து நடந்து கொண்டால் இன்பமே மேலோங்கும் என்பதில் ஐயமில்லை.

பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான புரிதலுணர்வு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதும், விட்டுக் கொடுத்து வாழ்வதிலுள்ள இன்பம் எத்தகையது என்பதுவும், ஒவ்வொருவரும் தத்தம் பொறுப்புக்களை உணர்ந்து நடந்துகொண்டால் எல்லாருக்கும் எல்லாம் நலமே என்பதுவும் இச்சிறுகதை வழி வெளிக்கொணரப்பட்டுள்ளது. பொதுவாக வீடுகளில் திருமணமாகாமல் இருக்கும் பெண்ணை அவ்வீட்டிலுள்ளவர்கள் பாரமாகவே கருதுவார்கள். எதிர்மறையான பொருளாதார நிலையில் வாழும் இருவர் காதலிக்க நேரும்பொழுது அதன் எதிர்ப்புக்கு முதன்மையான காரணம் அப்பொருளாதார சமநிலையின்மையாகவே இருக்கும். ஆனால் அத்தகைய ஏற்றத்தாழ்வினை அகற்றி பிள்ளைகளின் எதிர்காலத்தை மட்டும் கருத்தில்கொண்டு செயல்படும் பெற்றோரும் இருக்கின்றனர் என்பது கண்ணியம் உரையில் பதிவாகியுள்ளது.